DINAKARAN

16 FEB 2023

PAGE 14

புதுவை பல்கலை பேராசிரியரின்

# ஆராய்ச்சி கட்டுரைக்கு சர்வதேச அங்கீகாரம்



சாதனை படைத்த புதுவை பல்கலை பேராசிரியர் ஏழுமலை குழுவினரை துணைவேந்தர் குர்மீத் சிங், பசுமை ஆற்றல் துறை தலைவர் அருண்பிரசாத் ஆகியோர் பாராட்டினர்.

புதுச்சேரி, பிப். 16: புதுவை பல்கலைக்கழகத்தின் பசுமை ஆற்றல் தொழில்நுட்ப துறையில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், பயன்படுத்தப்பட்ட காகித தேனீர் கோப்பைகளை கொண்டு எளிய வேதியியல் செயலாக்கம் மூலம் செலினியம் கலந்த மெசோபோரஸ் கார்பனை மின்முனையை உருவாக்கி, அதன் மூலமாக பேட்டரி ஒன்றை உருவாக்கியுள்ளனர். பேராசிரியர் ஏழுமலை தலைமையில் ஆராய்ச்சியாளர், சங்கர் தேவி ஒரு எளிய முறையிலான வேதியியல் செயலாக்கத்தின் மூலம் உயர் சக்தி கொண்ட மின்முனையை உருவாக்கி, அதன் மூலம் அதிக ஆற்றல் திறன் கொண்ட லித்தியம்- ஆக்சிஜன் பேட்டரியை தயாரித்து சோதனை செய்துள்ளனர். இவ்வளவு சிறப்புமிக்க இந்த ஆய்வு கட்டுரையானது, லண்டனில் இருந்து வெளிவரும் ராயல் வேதியியல் சொசைட்டியின் பன்னாட்டு (நியூ ஜர்னல் ஆப் கெமிஸ்ட்ரி) இதழின் அட்டை பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் அவர், பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

பேராசிரியர் ஏழுமலை மற்றும் அவரது குழுவினர், சமீபத்தில் 6 இந்திய காப்புரிமைகளை எரிசக்தி சேமிப்பு மின்முனை சாதனங்களை தாக்கல் செய்துள்ளனர். மேலும், லித்தியம்- ஆக்சிஜன் பேட்டரி மற்றும் சோடியம்- ஆக்சிஜன் பேட்டரியை உருவாக்க இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையிடம் இருந்து பெரும் நிதியை ஆராய்ச்சி மற்றும் சோதனைக்காக பெற்றுள்ளனர். பேட்டரி மற்றும் சூப்பர்கெபாசிட்டர் உருவாக்கம் மற்றும் சோதனைக்காக அவரது ஆய்வகத்தில் புத்தம் புதிய நவீன கருவி வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

DINAMALAR

16 FEB 2023

PAGE 3



# பேப்பர் டீ கப்களை பயன்படுத்தி லித்தியம் பேட்டரி உருவாக்கி சாதனை

புதுச்சேரி, பிப். 16–

பயன்படுத்தப்பட்ட பேப்பர் டீ கப்களை கொண்டு எலக்ட்ரோடு உருவாக்கி, அதன் மூலமாக லித்தியம் – ஆக்சிஜன் பேட்டரியை புதுச்சேரி பல்கலைக்கழக குழுவினர் தயார் செய்து முத்திரை பதித்துள்ளனர்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்துறையின் பேராசிரியர் ஏழுமலை தலைமையில் ஆராய்ச்சியாளர் சங்கர்தேவி, லித்தியம் – ஆக்சிஜன் பேட்டரியை எளிய முறையில் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.



லித்தியம் – ஆக்சிஜன் பேட்டரியை உருவாக்கிய பேராசிரியர் ஏழுமலை, சங்கர்தேவி ஆகியோருக்கு, புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு தெரிவித்தார்.

அதாவது, பயன்படுத்தப்பட்ட பேப்பர் டீ கப்களை கொண்டு, எளிய வேதியியல் செயலாக்கத்தின் மூலமாக செலினியம் கலந்த மெசோபோரஸ் கார்பன் மின்முனையை (எலக்ட்ரோடு) உருவாக்கினார். இந்த எலக்ட்ரோடு மூலமாக அதிக ஆற்றல் திறன் கொண்ட லித்தியம் – ஆக்சிஜன் பேட்டரியை ஏழுமலை குழுவினர் உருவாக்கி உள்ளனர்.

இதுதொடர்பான ஆய்வுக் கட்டுரை, லண்டனில் இருந்து வெளி வருகின்ற ராயல் வேதியியல் சொசைட்டியின் சர்வதேச இதழின் அட்டைப் படமாக வெளியிடப்பட்டு கவுரவம் அளிக்கப்பட்டுள்ளது.

எலக்ட்ரானிக் சாதனங்களின் தேவைக்கும், மின்சார வாகனங்களின் வளர்ச்சிக்கும் மின்வேதியியல் மூலமாக ஆற்றலை சேமிக்கும் பேட்டரி சாதனங்களுக்கு மிகப்பெரிய தேவை உள்ளது. வழக்கமான லித்தியம் – அயன் பேட்டரிகளைவிட லித்தியம் – ஆக்சிஜன் பேட்டரிகள் பத்து மடங்கு அதிக ஆற்றலை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ஏழுமலை தலைமையிலான குழுவினர், 6 வகையான எரிசக்தி சேமிப்பு எலக்ட்ரோடு சாதனங்களுக்கு இந்திய காப்புரிமை பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளனர். மேலும், லித்தியம் – ஆக்சிஜன் பேட்டரி மற்றும் சோடியம் ஆக்சிஜன் பேட்டரியை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிக்காக, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடம் இருந்து நிதியுதவி பெற்றுள்ளனர்.

பேராசிரியர் ஏழுமலை மற்றும் குழுவினருக்கு, புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் வாழ்த்து தெரிவித்தார். பசுமை ஆற்றல் துறை தலைவர் அருண் பிரசாத் உடனிருந்தார்.

THE NEW INDIAN EXPRESS

16 FEB 2023

PAGE 3

EXPRESS READ

## Pondicherry University V-C gets an award

Puducherry: The 'Distinguished Leadership Award 2023' was conferred on Pondicherry University vice chancellor Gurmeet Singh, by the Society for Plant Research (SPA), at an international conference, on Tuesday. The conference cum workshop on 'Plant Molecular Biology and Bioinformatics' by the department of bioinformatics, in association with the Indian Science Congress Association (ISCA), SPA, Puducherry council for science and technology, and department of biotechnology, was held at Convention-cum-Cultural Centre, from 13 - 15 February. ENS

MAALAI MALAR

16 FEB 2023

PAGE 4

# புதுவை பல்கலைக்கழகத்தில் இருமொழி தேசிய கருத்தரங்கம்

புதுச்சேரி, பிப்.16— புதுவை பல்கலைக் கழகத்தில் ஒரு நாள் இருமொழி தேசிய கருத்தரங்கம் நடந்தது.

கருத்தரங்கத்தை மத்திய கல்வி அமைச்சகம், பல்கலைக்கழக பாரதியார் தமிழ் செம்மொழி இலக்கியப்புலம், சட்டப்புலம் இணைந்து நடத்தியது. சட்டப்புல துறைத்தலைவர் குர்மிந்தர்கவுர் வரவேற்றார். பேராசிரியர்கள் விக்டர், சந்திரிகா வாழ்த்தி பேசினர்.

பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக ஐகோர்ட்டு முன்னாள் நீதிபதி ராஜசூர்யா பங்கேற்றார். பேராசிரியர் கருணாநிதி நன்றி கூறினார்.

பேராசிரியர் பஞ்சாங்கம் சிலப்பதிகார வழக்குரை காதை பற்றி கட்டுரை வழங்கினார். சென்னை சட்டக்கல்லூரி பேராசிரியர் வின்செண்ட்கோம்ராஜ், வழக்காடு முறை குறித்து பேசினார். பேராசிரியர்கள் ரவிக்குமார், சுபலட்சுமி ஆகியோர் ஆய்வரங்கை நடத்தினர்.

MAALAI MALAR

16 FEB 2023

PAGE 8

### பேப்பர் கப் மூலம் பேட்டரி தயாரிப்பு

# பல்கலைக்கழக பேராசிரியர் குழு சாதனை

புதுச்சேரி, பிப்.16— புதுவை பல்கலைக் கழகத்தின் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் ஏழுமலை தலைமையில் ஆராய்ச்சியாளர் சங்கர்தேவி, லித்தியம்— ஆக்சிஜன் பேட்டரியை எளிய முறையில் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

பயன்படுத்தப்பட்ட பேப்பர் டீ கப்களை எளிய வேதியியல் செயலாக்கம் மூலம் செலினியம் கலந்த மெசோபோரஸ் கார்பன் மின் முனையை உருவாக்கினார். இந்த எலக்ட்ரோடு மூலம் ஆற்றல் திறன் கொண்ட லித்தியம்— ஆக்சிஜன் பேட்டரியை ஏழுமலை குழுவினர் உருவாக்கினர்.

இந்த ஆய்வுக்கட்டுரை, லண்டனில் வெளிவரும் ராயல் வேதியியல் சொசைட்டியின் சர்வதேச இதழ் அட்டைபடமாக வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஏழுமலை மற்றும் குழுவினரை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங் வாழ்த்தினார். பசுமை ஆற்றல்துறை தலைவர் அருண் பிரசாத் உடனிருந்தார்.